**ஜூலை - 27**

**"இந்த தானியேலை அவனுடைய தேவனைப்பற்றிய வேதவிஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய, அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்கக்கூடாது என்றார்கள்." - தானி 6 : 5**

எல்லோரும் தனியேலைப்போல வழிகாட்டக்கூடியவர்களாக இருக்கிறதில்லை. அவனுக்கிருந்ததுபோல எல்லோருக்கும் தரிசனங்களைக் காணவும், வெளிப்படுத்தல்களைச் சொல்லவும், வியாக்கியானம் பண்ணவும், அருளப்படவில்லை. ஆனால் எல்லோருக்கும் நீதியின் தத்துவங்களுக்குள்ள பக்தியின் ஒரே மாதிரியான ஆவி இருக்கும். இந்தப் பக்தி தெய்வீக பராமரிப்பின் கீழ்ப்படியாக, நெருக்கமான பாதையின் ஊடே, நமக்கு ஒரு மாதிரியை வைத்த அவருடைய அடிச்சுவடிகளில் நடக்க அவர்கள் நாடுகையில் அந்தப் பக்தி சோதிக்கப்படும். அந்த மாதிரியை வைத்தது நம்முடைய கர்த்தராகிய யேசு. அவரே நம்முடைய தானியேல், நம்முடைய தலைவர். அப்படியானால், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிற எல்லோரும் அநியாயத்தை விட்டு விலகுவோமாக. அப்படிப்பட்ட எல்லோரும் உண்மையுள்ளவர்களாயிருப்போமாக. தனியேலைப்போல துணிவு கொள்ளுவோமாக!. **- Z ’99, 167 (R 2492)**

தனியேலின் குணம் பின்பற்றுவதற்குத் தகுதியாயிருக்கிறது. தனியேலைப்போல நாம் சரீரப்பிரகாரமான மனது சம்பந்தமான, நல்ல நடத்தை சம்பந்தமான, பக்தி சம்பந்தமான காரியங்களில் அவ்வளவு கவனமுள்ளவர்களாக இருக்க நாம் நாட வேண்டும். ஏனென்றால், இயல்பான மனுஷன் நமக்கு எதிராக நியாயமானபடி ஒரு குற்றமும் சுமத்தமாட்டான். நம்முடைய மதசம்பந்தமான செயல், சத்தியத்துக்கு இணக்கமாக இருக்குமானால், தவிர்க்கக் கூடாதபடி அவன் அதன்மேல் இடறுவான். சத்தியத்தின் எதிரிகள் மற்றவழிகளில் நாம் தவறுதலான காரியம் செய்கிறதாக நம்மைக் குற்றம் சாட்டித் திருப்தியடைவார்கள். தானியேல் இடங்கொடுக்காததுபோல, நாமும் இதற்கு ஒரு சந்தர்ப்பமும் கொடுக்கக் கூடாது. **- P ’33, 80.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஆதி 49:23; யோபு 12:4; சங் 11:2; 38:20; 44:15-18,22; ஏசா 29:20,21; மத் 5:10-12,44; 10:16-18,21-23,28; 24:9,10; லூக் 6:22,23; 21:12-19; யோவா 15:18,19; 16:1,2; 17:14; அப் 4:16-20; 5:40-42; ரோம 8:17,35-37; 2கொரி 11:23-27; எபி 12:3,4.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 347 (R 4874)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நீதியின் பொருட்டு நான் துன்பப்படுத்தப்பட்டேனா? நான் அதை எவ்வாறு சகித்தேன்? பலன்கள் என்ன?**